# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com
Website:www.bankubeutn.in


சுற்றறிக்கை எண்:152:2016 நாள்: 12.07.2016

அன்பார்ந்த தோழர்களே,

## <u>வீட்டு வசதிக் கடன்</u>

அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர்ந்த முயற்சியின் காரணமாக, ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வசதிக்கடனில் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன.

1. ஏற்கனவே, வீட்டு வசதிக் கடன் பெற்றுள்ள ஊழியர்கள், விரும்பினால், புதிய திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக்கொள்ளலாம்.
2. 28.08.2015க்கு முன்பாக பொதுமக்கள் போல வீட்டு வசதிக் கடன் (Union Home) பெற்ற ஊழியர்கள், அதனை ஊழியர் வீட்டு வசதிக் கடனாக மாற்றிக்கொள்ளலாம்.
3. 28.08.2015க்குப் பின் வழங்கப்படும் அனைத்து கடன்களையும் 70 வயது வரை திருப்பிச் செலுத்தலாம்.
4. ஏற்கனவே வீட்டு வசதிக் கடன் பெற்று திருப்பிச்செலுத்தியவர்கள், இரண்டாவது வீட்டிற்கு புதிய கடன் பெறலாம்.
5. தனது தந்தை, சகோதரர் போன்ற சொந்தங்களிடமிருந்து, அவர்களது சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட வீடு அல்லது நிலமாக இருந்தால், ஊழியர்கள் அதனை வாங்கிக்கொள்ளலாம். மேலும் அவர்கள் ஊழியரை சார்ந்திருப்பவாராக் இருக்கக்கூடாது.
6. ஒரே நகரத்திலோ, கிராமத்திலோ முதல் வீடு இருக்கும்போது, இரண்டாவது வீடு தேவைப்பட்டால், அங்கேயே வாங்கிக்கொள்ளலாம்.
7. **நிலம் ஊழியர்களது துணைவரின் (Spouse) பெயரில் இருந்தால் வீடு கட்ட கடன் பெறலாம்.**
8. **ஊழியரும் அவரது துணைவரும் வங்கியில் பணியாற்றினால், ஒரே வீட்டிற்கு இருவரும் அவர்களுக்குறிய கடன் தொகையை பெறலாம். இருவரும் எழுத்தர்களாக இருந்தால் ரூ.60 லட்சம் கடன் பெறலாம். (If husband and**

**wife are employed in the Bank, they can avail separate loans and acquire one single house).**

9. வீடு ரிப்பேர் செயவதற்கு தனி கடன் வசதி உள்ளது. எனவே, வீட்டுக்கடன் தனியாகவும், ரிப்பேர் செய்வதற்கு தனியாகவும் கடன் பெறலாம்.

10. வீடு அல்லது நிலம் வாங்கும்போது, அதற்கான பத்திரச்செலவு (Registeration Fees), முத்திரைத்தாள் (Stamp Paper) வாங்குவதற்கான செலவையும் வீட்டு வசதிக் கடனில் சேர்த்துக்கொள்ளலாம்.

**<u>பகுதி நேர ஊழியர்களாகப் பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு:</u>**

01.11.2012க்கு முன் ஓய்வூதியம் கணக்கிடப்படும்போது, பகுதி நேர ஊழியர்கள் 1/3 Scale, 1/2 Scale, 3/4 Scale என அவர்கள் பணியாற்றிய பதவிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. அதாவது 1/3 Scale பணியாளர் 3 ஆண்டுகள் பணியாற்றினால் அது ஒரு ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டு, ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**